**ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகள் அலுவல்கள் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஷ்வால் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் அலுவல்கள் உதவிச் செயலாளர் டொம் மலினோவ்ஸ்கி ஆகியோர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களைத் தொடர்ந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர அவர்களினால் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்புரைகள்**

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கொழும்பு 2016 யூலை 12 ஆந் திகதி**

பெண்மணிகளே! கனவான்களே! உங்களுக்கு எனது மாலை வந்தனம் உரித்தாகுக.

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகள் அலுவல்கள் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஷ்வால் அவர்களையும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் அலுவல்கள் உதவிச் செயலாளர் டொம் மலினோவ்ஸ்கி அவர்களையும் இலங்கைக்கும் இந்த அமைச்சிற்கும் திரும்பவும் வரவேற்பது ஓர் மகிழ்ச்சிகரமான விடயமாகும்.

தற்போது உங்கள் அனைவருக்கும் நிஷா பிஷ்வால் மற்றும் டொம் ஆகிய இருவரும் மிகவும் பரிச்சயமானவர்கள் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

கடந்த ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற சனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தோர்தல்களுக்குப் பின்னர் அடிப்படைச் சுதந்திரம், சனநாயகத்தைப் பலப்படுத்துதல், சிறந்த நல்லாட்சி, நீதி மற்றும் சட்ட ஆட்சி ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மக்களின் ஆதரவுடன் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளுடன் எமது இரண்டு நாடுகளும் அதாவது இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்குமிடையிலான பாரம்பரிய நட்புறவு ரீதியிலான உறவுகளை ஒன்றரை ஆண்டுகளுக்கும் சிறிதளவு கூடுதலான கலப்பகுதியில் வரலாற்று ரீதியான உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்துவதில் வெற்றியடைந்துள்ளன. இது ஓர் அர்த்தத்தில் இரண்டு நாடுகளுக்குமான ஓர் புதிய தொடக்கமாகும் என்பதுடன் தற்போது நாம் இத்தொடர்பை கட்டியெழுப்புவதில் இயற்கையான பங்காளிகளாக ஈடுபட்டுள்ளோம்.

கடந்த ஆண்டு சனவரியிலிருந்து ஐக்கிய அமெரிக்க நாடுகளினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தொடர் விஜயங்களைக் கண்டுள்ளோம். இது இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி அவர்களின் அமைச்சரவை மட்டத்திலான விஜயத்தையும் தூதர் சமந்தாபவர் அவர்களுடைய விஜயத்தையும் உள்ளடக்குகின்றது. உதவிச் செயலாளர் பிஷ்வால் மற்றும் உதவிச் செயலாளர் மலினோவ்ஸ்கி ஆகியோர்களினது கடின உழைப்புடன் இணைந்த இவ்உயர் மட்ட விஜயங்களுடனும் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் இலங்கையிலுமுள்ள எமது அந்தந்த தூதுவர்களையும் உள்ளடக்கிய ஏனையவர்களின் விஜயங்களுடனும் நாம் எமது நாடுகளுக்கிடையிலான தொடர்புகளைப் பலப்படுத்துவதில் வெற்றி ஈட்டியுள்ளோம்.

இக்கடின உழைப்பின் பெறுபேறு ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையே ‘‘பங்காளித்துவ உரையாடல்’’ ஒன்று நிறுவப்பட்டமையைக் கண்டுள்ளது. இந்த ‘பங்காளித்துவ உரையாடல்’ முதற்தடவையாக இவ்வாண்டு பெப்புருவரி மாதத்தில் வாஷிங்டன், டி.சி யில் சந்திப்பை நடாத்தியுள்ளது. இன்று இடம்பெற்ற எமது சந்திப்பில் நாம் பொருளாதார ஒத்துழைப்பு; ஆட்சி, அபிவிருத்தி ஒத்துழைப்பு, மக்களுக்கு - மக்கள் தொடர்புகள்; பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கிய இருதரப்பு முக்கியத்துவமுடைய விடயங்களின் தொகுதியொன்றைப் பற்றிக் கலந்துரையாடியுள்ளோம். நாம் இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பிலான விடயங்கள் பற்றியும் கலந்துரையாடியுள்ளோம்; அத்துடன் எமது நாடுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் சருவதேச மற்றும் பிராந்திய விடயங்கள் மற்றும் நிகழ்வுகள்

பற்றியும் கலந்துரையாடியுள்ளோம். எமது பங்காளித்துவத்தை பலமாக்கும் வழிவகைகள் பற்றிய கலந்துரையாடல்களுக்கும் மேலதிகமாக இருதரப்பு வியாபாரத்தையும் மற்றும் வியாபாரத்தின் அதிகரிப்பதையும் உள்ளடக்கி வாஷிங்டன், டி.சி. யில் செப்டம்பரில் சமுத்திரங்களின் பராமரிப்பையும் நோக்காகக்கொண்டு நாம் கடல்சார் ஒத்துழைப்பை அதிகரித்தல் மற்றும் எமது 'சமுத்திரங்கள்' மாநாட்டில் இலங்கையின் பங்குபற்றல் விடயத்தைப் பற்றியும் கூட நாம் கலந்துரையாடியுள்ளோம்.

நல்லிணக்கத்தின் நடைமுறையில் நாம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றமையால் இலங்கை மக்களுக்கு பொருளாதாரச் சமாதானப் பங்கிலாபத்தை வழங்கும் முக்கியத்துவம் பற்றியும் கலந்துரையாடியுள்ளோம். அத்துடன் நான் நல்லிணக்கத்தினதும் அபிவிருத்தியினதும் பின்னிய பிணைப்புத் தன்மை பற்றியும் இந்த இரண்டின் வெற்றிக்கும் தேவைப்படும் வளங்கள் பற்றியும் வலியுறுத்திக் கூறியுள்ளேன்.

தங்களுடைய தற்போதைய விஜயத்தின்போது இந்த இரண்டு உதவிச் செயலாளர்களும் அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களை நாளைக்குச் சந்திப்பர். அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரையும் சிரேட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும் அமைச்சர்களையும்கூட சந்திப்பர் அத்துடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும் முப்படைகளின் தளபதிகளையும் சந்திப்பர். அவர்கள் 14ஆந் திகதியன்று திருகோணமலைக்கு விஜயம் செய்து அங்கு கிழக்கு மாகாண ஆளுநரையும் கிழக்கு மாகாண முதலமைச்சரையும் சந்திப்பர். அவர்கள் அங்கு கோணேஸ்வரம் கோவிலுக்கும் பல பிற கருத்திட்ட அமைவிடங்களுக்கும் விஜயம் செய்வர்.

நான் ஐக்கிய அமெரிக்க நாடுகளுடன் எமது ஈடுபாட்டை விசேடமாக 'பங்காளித்துவ உரையாடல்' மூலமாக பாரிய உயரங்களுக்குக் கொண்டு செல்வதைத் தொடர்வதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அத்துடன் நான் பிஷ்வால் மற்றும் டொம் ஆகிய இருவருக்கும் அவர்களுடைய பேராளர் குழுவுக்கும் இலங்கை விஜயமானது மிகவும் மகிழ்ச்சிகரமானதாக இருக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன். தற்போது நான் பிஷ்வால் அவர்களை ஓர் சிறிய உரை நிகழ்த்துமாறு அழைக்கின்றேன்.

நன்றி!